இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 347 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 12 – செவ்வாய்க்கிழமை 28 ஜூலை 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 347 : Thiruvalluvar Year - 2057 - Aadi 12 - Tuesday 28 July 2026 - Dak 8 Pages ₹ 5.00




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (27.07.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், விருதுநகர் வடக்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த விருதுநகர் மாவட்ட சிறுபான்மையினர் நலப் பிரிவு துணைத் தலைவர் பூலாங்கால் எம்.சித்திக் தலைமையில் மு.ரஜிஸ்அகமத், எம்.கோபிநாத், இமாம் அலி உள்ளிட்ட 50க்கு மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர். அதுபோது, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, விருதுநகர் வடக்குச் செயலாளர் தங்கம் தென்னரசு, எம்.எல்.ஏ., விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், திருச்சுழி தெற்கு ஒன்றியச் செயலாளர் பொன்னுத்தம்பி, திருச்சி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தனபாண்டி, காரியாபட்டி நகரச் செயலாளர் ஆர்.கே.செந்தில் ஆகியோர் உடனிருந்தனர்.

### மாணவர்கள் மீது தாக்குதல்:

## காவல்துறைக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

### பிரம்படி நடத்தியதை நியாயப்படுத்த முடியாது!

**புதுடெல்லி, ஜூலை 28 -**

**நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தின்போது, போலீசார் மாணவர்கள் மீது நடத்திய தடியடியை நியாயப்படுத்த முடியாது என உச்சநீதிமன்றம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

நீட் தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக, டெல்லி மற்றும் பீகாரில் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்திய காவல்துறையினர் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

டெல்லி கநாட் பிளேஸ் பகுதியில் போராட்டம் நடத்தியவர்கள் மீது 7 முறை பெல்லட் துப்பாக்கிச் சூடு நடத்தப்



பட்டுள்ளதாகவும், பீகாரில் ஏ.கே. 47 ரக துப்பாக்கிகள் பயன்படுத்தப்பட்டதாகவும் மனுக்களில் தெரிவிக்கப்பட்டன. இந்த வழக்குகளை விரைந்து விசாரிக்கக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தலைமை நீதிபதி அமர்வு முன்பு, வழக்கறிஞர்கள் சார்பில் முறையிடப்பட்டது.

இதனை விசாரித்த உச்சநீதிமன்றம், மாணவர்களுக்கு போராட்டம் நடத்த உரிமை உள்ளது என்றும், அவர்கள் மீது அதிக பலத்தை செலுத்துவதை ஏற்க முடியாது என்றும் கண்டனத்தை தெரிவித்தது.

போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது தடியடி நடத்தப்பட்டதை நியாயப்படுத்த முடியாது எனக் குறிப்பிட்ட தலைமை நீதிபதி அமர்வு, டெல்லி மற்றும் பீகாரில் மாணவர்கள் மீது போலீசார் நடத்திய தாக்குதல் தொடர்பான வழக்குகள் அனைத்தும் இன்று (28.07.2026) விசாரிக்கப்படும் என உத்தரவிட்டது.

அப்போது ஒன்றிய அரசின் சொலிசிட்டர், விசாரணையின்போது நீதிமன்றத்தில் இருக்க வேண்டும் என உத்தரவிட்ட நீதிமன்றம், தேசிய அளவில் வழிகாட்டி நெறிமுறைகளை விதிக்கும் வகையில் வழக்கு விசாரணை நடத்தப்படும் எனவும் தெரிவித்தது.

---

### மாணவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

## நாடாளுமன்றத்தில் அமளி - இரு அவைகளும் மீண்டும் மீண்டும் ஒத்திவைப்பு!

### நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தி.மு.க. நோட்டீஸ்!

புதுடெல்லி, ஜூலை 28 -

நீட் தேர்வு, டெல்லியில் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தியதால் நாடாளுமன்ற இரு அவைகளும் 6வது நாளாக நேற்றும் முடங்கின.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் கடந்த 20ம் தேதி தொடங்கியது. நீட் தேர்வு முறைகேடு, டெல்லி மாணவர் போராட்டம் மற்றும் மேகதாது அணை உள்ளிட்ட விவகாரங்களை முன்வைத்து எதிர்க்கட்சிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டதால், நாடாளுமன்ற அலுவல்கள் முற்றிலுமாக முடங்கின. வார இறுதி விடுமுறைக்குப் பிறகு நாடாளுமன்றம் நேற்று கூடியது.

மக்களவை கூடியதும் நீட்



தேர்வை ரத்து செய்யக் கோரி தான் அளித்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானத்தை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு வலியுறுத்தினார். மேலும், டெல்லியில் மாணவர்கள் மீது கொடிய ஆயுதங்கள் மூலம் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த அவர், இது குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்றும் கோரினார்.

இதனைத் தொடர்ந்து தங்களது கோரிக்கைகள் குறித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் குரல் எழுப்பினர். இதனால், அவையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து நண்பல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார்.

பின்னர் அவை கூடியதும் நுழைவுத் தேர்வுகளில் முறைகேடுகள் நடந்தால் தண்டனையை அதிகரிக்கும் சட்டத் திருத்த மசோதாவை ஒன்றிய அமைச்சர் ஜிஜேந்திர சிங் தாக்கல் செய்தார். ஆனால், மாணவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து முதலில் விவாதிக்க வேண்டும் எனக் கோரி எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டனர். இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

**மாநிலங்களவை ஒத்திவைப்பு !**

இதேபோல், மாநிலங்களவை கூடியதும், நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி தான் அளித்துள்ள நோட்டீஸ் மீது விவாதம் நடத்த வேண்டும் என தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா வலியுறுத்தினார். மருத்துவர்களாக வேண்டும் என்று விரும்பும் மாணவர்களின் துயர நிலை முடிவில்லாமல் தொடர்கிறது என்றும் நீட் தேர்வினால் தற்கொலைகள் தொடர்வதாகவும் அவர் தெரிவித்தார்.

மாணவர்கள் மீது டெல்லி காவல்துறையினர் நடத்திய தாக்குதல்கள் குறித்தும் விசாரணை நடத்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தினர். இதனைத் தொடர்ந்து நண்பல் 12 மணி வரை மாநிலங்களவை ஒத்திவைக்கப்பட்டது. பின்னர் அவை கூடியதும் அமைதியற்ற சூழலே நிலவியதால் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

---

### சிவசேனா (யு.பி.டி.) தலைவர்

## உத்தவ் தாக்கரே பிறந்தநாள்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூலை 28 -**

**சிவசேனா (உத்தவ் பாபா சகேப் தாக்கரே) தலைவர் உத்தவ் தாக்கரே அவர்களின் பிறந்த நாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.**

அது வருமாறு :-

சிவசேனா (UBT) தலைவர் உத்தவ் தாக்கரே அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.

நேற்று மும்பையின் சிவாஜி பூங்காவில் திரண்டு வந்து மக்கள் காட்டிய பேராதரவு என்பது, தங்களைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் தங்கள் பக்கம் நிற்க மக்களின் உறுதியை மேலும் வலுப்படுத்தவே செய்திருக்கிறது என்பதை ஆணித்தரமாக நினைவூட்டியுள்ளது.

நல்ல உடல்நலத்தோடும், தங்களின் தளராத போராட்டக் குணத்தோடும் சவால்களை எதிர்கொண்டு



வெற்றி பெற விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### நாடாளுமன்ற வளாகத்தில் – பதாகைகளை ஏந்தி

## தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம்!

### நீட் தேர்வை முழுமையாக ரத்து செய்ய கோரிக்கை!

*புதுடெல்லி, ஜூலை 28-*

*நீட் தேர்வை ரத்து செய்ய கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.*

*நீட் தேர்வுக்கு எதிராக தி.மு.க. தொடர்ந்து சமரசம் இல்லாமல் தீவிரமான போராட்டங்களை நடத்தி வருகிறது. நாடாளுமன்றத்திலும் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரின் முதல் நாளில் இருந்தே தி.மு.க. குரல் எழுப்பி வருகிறது.*

*இதன் தொடர்ச்சியாக நீட் தேர்வை ரத்து செய்ய கோரி நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள் நேற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர். "BAN NEET", "ABOLISH NEET" போன்ற பதாகைகளை ஏந்தி அவர்கள் முழக்கமிட்டனர்.*

*இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மக்களவை தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, தேர்வுக்கு முழுமையான தடை விதிக்கக் கோரி தி.மு.க. தொடர்ந்து போராடுவதாகத் தெரிவித்தார்.*

*தொடர்ந்து நீட் தேர்வுக்கு நிரந்தரமாக தடை விதிக்க வேண்டும் நீட் தேர்வுக்கு முழுமையான தடை விதிக்கக் கோரி தி.மு.க. நோட்டீஸ் அளித்துள்ளது. ஜந்தர் மந்தர் போராட்டத்தில் மாணவர்கள் மீது ஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்தி நடத்தப்பட்ட தடியடி குறித்தும் விவாதிக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.*

---

### த.வெ.க. அரசின் மெத்தனத்தால் - கோயம்பேடு - ஆலந்தூர் வரையிலான

## மெட்ரோ வழித்தடம் திறப்பு ஓராண்டு தள்ளி வைப்பு!

சென்னை, ஜூலை 28 –

சென்னை கோயம்பேடு நந்தம்பாக்கம் – ஆலந்தூர் வரையிலான மெட்ரோ வழித்தடப் பணிகள் தாமதமாகி உள்ளன. த.வெ.க. அரசின் மெத்தனத்தால், இந்த வழித்தடம் திறக்கப்படுவது அடுத்த ஆண்டுக்கு தள்ளிப்போய் உள்ளது.

சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத் திட்டத்தின் ஒரு பகுதியாக, மாதவரம் சோழிங்கநல்லூர் வழித்தடத்தில் கோயம்பேடு நந்தம்பாக்கம் ஆலந்தூர் புதிய மெட்ரோ வழித்தடம் அமைகிறது. முதலில், இந்த ரெட் லைன் வழித்தட சேவை கோயம்பேட்டில் இருந்து ஆலப்பாக்கம் வழியாக நந்தம்பாக்கம் டிரேட் சென்டர் வரை மட்டுமே இயக்க திட்டமிடப்பட்டிருந்தது.

பூந்தமல்லி – வடபழனி வழித்தடப் பணிகளின் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில், இச்சேவையை நந்தம்பாக்கத்துடன் நிறுத்தாமல், ஆலந்தூர் நிலையம் வரை நீட்டிக்கும் வகையில் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது.

ஆலந்தூர் மற்றும் கோயம்பேடு ஆகிய இரண்டுமே ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள முதற்கட்ட மெட்ரோவின் முக்கிய சந்திப்புகளாகும். இதனுடன், புதிய வழித்தடத்தையும் இணைப்பதால், பயணிகள் மிக எளிதாக மற்ற வழித்தடங்களுக்கு மாறிக்கொள்ள முடியும்.

இதற்கிடையே, பூந்தமல்லி பைபாஸ் –வடபழனி இடையேயான 14 புள்ளி 6 கிலோ மீட்டர் நீளமுள்ள வழித்தடம் இயக்கத்திற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு அனுமதிகளையும் பெற்றிருந்தாலும், சேவை இன்னும் தொடங்கப்படவில்லை. இந்த வழித்தடத்தில் சாலிகிராமம், ஆவிச்சி பள்ளி, ஆழ்வார் திருநகர், வளசரவாக்கம், காரம்பாக்கம் மற்றும் ஆலப்பாக்கம் சந்திப்பு ஆகிய ஆறு மெட்ரோ நிலையங்களில் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைய மேலும் 3 மாதங்கள் ஆகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோயம்பேடு நந்தம்பாக்கம் ஆலந்தூர் வரையிலான மெட்ரோ வழித்தடப் பணிகள் தாமதமாகி உள்ளன. இந்த வழித்தடத்தில் உள்ள மெட்ரோ நிலையங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் கட்டமைப்புகளை அமைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்த கட்டுமானப் பணிகள் அக்டோபர் இறுதிக்குள் முடிந்தால் மட்டுமே அடுத்தகட்டப் பணிகளைத் தொடங்க முடியும்.

சிவில் கட்டுமானங்கள் முடிந்த பிறகுதான் தண்டவாளங்களில் சிக்னலிங் மற்றும் தொலைத்தொடர்பு அமைப்புகளுக்கான தொழில்நுட்பப் பணிகள் தொடங்கப்பட வேண்டும். இந்த தொழில்நுட்பப் பணிகளை முடிப்பதற்கே குறைந்தது 2 முதல் 3 மாதங்கள் வரை ஆகும்.

அதன் பின்னரே ரயில்வே பாதுகாப்பு ஆணையத்தின் இறுதிச் சோதனைகள் மற்றும் பாதுகாப்பு அனுமதிகளைப் பெற முடியும். த.வெ.க. அரசின் இந்த மெத்தனத்தால், கோயம்பேடு நந்தம்பாக்கம் ஆலந்தூர் வரையிலான மெட்ரோ வழித்தடம் திறக்கப்படுவது அடுத்த ஆண்டுக்கு தள்ளிப்போய் உள்ளது.